**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.4242/ஆ5/2025, நாள்.08/09/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – அனைத்து வகை பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான "எனது தோழன் / தோழி" என்ற கருப்பொருளில் கட்டுரை எழுதுதல் போட்டி நடத்த தெரிவித்தல் – சார்பு

பார்வை சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.033232/எம்2/எஸ்3/2025,

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, அனைத்து வகை பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான "எனது தோழன் / தோழி" (தாங்கள் சந்தித்த மாற்றுத்திறனாளி நண்பரைப் பற்றி ஒரு கட்டுரை) என்ற கருப்பொருளில் கட்டுரை எழுதுதல் போட்டி பள்ளிகளில் நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கட்டுரைக்கான குறிப்புகள் –**

- எந்த வகுப்பில் அந்த நண்பரை சந்தித்தனர்.
- தனது நண்பரின் சிறப்புத் தேவைகள் குறித்து தனது புரிதல் என்ன
- தனது நண்பர் வகுப்பில் மற்றவர்களுடன் இணைந்து இருக்க தான் எப்படியெல்லாம் உதவினார்.

**போட்டிக்கான விதிமுறைகள் –**

- 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்கலாம்.
- கட்டுரை A4 தாளில் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் இருக்கலாம்.
- போட்டியாளரான மாணவரது புகைப்படத்தையும் கட்டுரையுடன் இணைத்து அனுப்ப வேண்டும். (மாற்றுத்திறனாளி மாணவரின் புகைப்படம் தேவையில்லை)

**பரிசுகள் –**

- சிறந்த 20 கட்டுரைகளுக்கு பரிசு வழங்கப்படும்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள் தேன்சிட்டு இதழில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்து வகை பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு "எனது தோழன் / தோழி" (தாங்கள் சந்தித்த மாற்றுத்திறனாளி நண்பரைப் பற்றி ஒரு கட்டுரை) என்ற கட்டுரை போட்டியினை நடத்தி சிறந்த கட்டுரையை தேர்ந்தெடுத்து அக்கட்டுரையினை (போட்டியாளரின் புகைப்படத்தையும்) myfriendcoe@gmail.com என்ற மின்னஞ்சல் முகரிவரிக்கு 30.09.2025க்குள் அனுப்பிவைக்குமாறு அனைத்து வகை நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த கட்டுரையினை myfriendcoe@gmail.com என்ற மின்னஞ்சல் முகரிவரிக்கு அனுப்பிவிட்டு அதன் நகலினை அந்தந்த மாவட்டக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி/ தனியார் பள்ளிகள்) பள்ளிகளிடமிருந்து பெறப்பட்ட கட்டுரைகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளுமாறும், இவ்வலுவலகம் மூலம் கட்டுரைகளை ஒப்படைக்க கோரும்போது கட்டுரைகளை சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் /
   தனியார் பள்ளி முதல்வர்கள்,
   வேலூர் மாவட்டம்.

நகல்–
தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.